புதுச்சேரி அரசு

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

எண். A.04/வமபேமே/2011 புதுச்சேரி, தேதி 10-10-2011

<u>செய்திக் குறிப்பு</u>

ஜப்பானில் மார்ச் 2011ல் ஏற்பட்ட சுனாமி பேரழிவின் காரணமாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் இந்தியாவில் நிலநடுக்கம் சுனாமி மற்றும் அணுவினால் ஏற்படும் பேரழிவுகளில் போது மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக தேசிய பேரிடர் மேலாண்மை அதிகார அமைப்பு மற்றும் INCOISம் இணைந்து இந்தியாவின் கடலோர மாநிலங்களில் இந்தியப் பெருங்கடல் சுனாமி ஒத்திகை (IO Wave II) நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன. மேலும், இவ்வொத்திகை இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, இலங்கை போன்ற 25 நாடுகளில் நடத்தப்பட உள்ளது. இதன் தொடர்ச்சியாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஆட்சிப்பரப்புக்குட்பட்ட பிள்ளைச்சாவடி மீனவ கிராமத்தில் புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வருகின்ற 12-10-2011 அன்று சுனாமி பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற இருக்கின்றது. இவ்வொத்திகையில் புதுச்சேரி அரசின் பொதுப்பணித்துறை, மின்துறை, கல்வித் துறை, போக்குவரத்துத் துறை, நலவழித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்நிகழ்ச்சியின் போது சுனாமி போன்ற பேரழிவு ஏற்படும் காலங்களில் பொது மக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை பற்றிய செயல் விளக்கம் காட்டப்படுகிறது. ஆகையால் பிள்ளைச்சாவடி மீனவ கிராம மக்கள் இந்நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இது வெறும் ஒத்திகை நிகழ்ச்சி என்பதால் பொது மக்கள் யாரும் வதந்திகளை கண்டு அச்சப்பட வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்

**(Dr. சு.பா. தீபக்குமார், இ.ஆ.ப.,)**
**மாவட்ட ஆட்சியர்**